If any statement is made on the Floor of the House by a Member or Minister which another Member believes to be untrue, incomplete or incorrect it does not constitute a breach of privilege.. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately and knowingly.

Incorrect statements made by a Minister cannot make any basis for a breach of privilege. It is only a deliberate lie if it can be substantiated that would certainly bring the offence within the meaning of a breach of privilege.

இதிலிருந்து பார்க்கும்பொழுது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவையில் கூறிய செய்தி தவறு என்று கொள்வதற்கில்லை. எனவே இதில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தைச் சென்னைக்கு மாற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். பழனிவேல், கோ. வீரையன், எஸ். ஏ. தங்கராஜன், திருமதி பாப்பா உமாநாத் திருவாளர்கள் எல். மூக்கையா, ப. முத்து சாமி, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ஆ. அறிவழகன், வி. கே. சின்னசாமி, பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, "கோடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல் கலைக் கழகத்தை சென்னைக்கு மாற்றுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு மிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையைப் பற்றி அரசின்

[டாக்டர் க. அன்பழகன்]

1990 மே, 7]

கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால் மிக மிக விரிவான அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கையில் அனைத்து விளக்கங்களும் இருக்கின்றன.

அறிக்கை.

'சரிநிகர் சமானம்' என்ற கவிஞர் பாரதியின் கவிதைத் தொடரை, சமத்துவ சமூக அமைப்பு வேண்டிவிடுத்த அழைப்பை "Towards equal status" என்று ஆங்கிலப்படுத்தி அதனை முத்திரை மொழியாகக் கொண்டு மகளிர் சிக்கல்களை ஆராயும் நோக்கத்துடன் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஒரே பல்கலைக்கழகம் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம். தமிழக அரசுச் சட்டம் 15-ன் கீழ் 1984-ல் இப்பல்கலைக்கழகம் மகளிரியலைப் (Women's studies) பொறுத்தமட்டிலும் மாநில முறை மையிலான தொடர்பு படுத்தும் பொறுப்பு, ஆலோசனை நல்கும் பணிகள் ஆய்வு ஏற்றுச் செய்தல் ஆகிய நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும் சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யவும், ஆசிரியர்களைப் பரிமாறிக்கொள்ளவும் தக்க விதத்தில் காலப்போக்கில் அனைத்துலகக் கல்வி மையமாக உருவாகும் கருத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்கான மாதிரியை (Model) உருவாக்கிய டாக்டர் மால்கம் ஆதிசேஷையாவின் தலைமையில் இயங்கிய உயர்மட்டக்குழுவின் பரிந்துரைப்படி இப்பல்கலைக்கழகம் மாநிலத்திலுள்ள அனைத்துப் பெண்கள் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பக் கூடங்களுக்கு ஆலோசனை வழங்கும் மையமாகவும் பல்கலைக்கழகம் அமைய வேண்டிய இடம் எளிதில் சென்றடையக்கூடிய ஓர் இடமாக இருக்க வேண்டுமென்பதும் ஆகும். ஆனால் பல்கலைக்கழகம் தற்போது கோடைக்கானலில் இயங்குவதால் இப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இயலவில்லை.

பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றவும் கீழ்க்காணும் பல்வேறு காரணங்களுக்காகவும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தைச் சென்னை நகருக்குக் கொண்டு செல்வது சாலச் சிறந்தது என அரசு தீர்மானித்துள்ளது :

(1) பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளும் மேற்கொண்டுள்ள செயல்பாட்டுத் திட்டங்கள் (Projects) பெண்கள் முன்னேற்றத்தையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஆனால்,

இச் செயல்பாடுகள், திட்டங்களின் முடிவுகளின் பலன்கள் மாநில முழுவதிலுமுள்ள பெருவாரியான பெண்களைச் சென்று அடைய முடிவதில்லை. மேலும் உதவியோ, ஆலோசனையோ பெற விரும்பும் பாதிக்கப்பட்ட பெண்கள், கொடைக்கானல் மிகவும் தூரத்தில் இருப்பதால், இங்கு வந்து பயன்பெற முடியாத சூழ்நிலையில் உள்ளனர்.

(2) பல்கலைக்கழகம் என்பது 'அறிஞர்கள் கூடும்' இடமாகும். ஆனால் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளிலும் தகுதி மற்றும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது. பல துறைகளில் உள்ள நியமனங்களுக்கான தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் மீண்டும் மீண்டும் விளம்பரங்கள் கொடுத்துக்கொண்டே இருந்தாலும் நியமனங்கள் நிரப்பப்பட முடியாமலேயே இருக்கின்றன. இதனால் ஏற்படும் செலவுகளும் பல்கலைக்கழகத்தின் நிதிநிலையைப் பெரிதும் பாதிக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம் காணப்படும் இந்நாளில் ஏன் மேற்கண்ட நிலை நீடிக்கின்றது என்ற வினாவிற்குக் கீழ்க்காணும் விடைகள் மிகப் பொருத்தமானவையாயிருக்கும்.

(அ) நியமனங்களுக்கான தேர்வு செய்யப்படுபவர் மணமானவராயிருப்பின் அவர்கள் கணவன்மார்கள் இங்கு வந்து தங்கும் தகுதிக்கேற்ற வேலை தேடிக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்காளாவதால் நிரந்தர வேலையை ஏற்றுக் கொள்ள பெண்கள் தயங்குகின்றனர். ஏற்கெனவே அரசு வேலையிலிருப்பவர்களாகக் கணவன்மார்கள் இருந்தால் மாற்றல் (Transfer) வாங்கி இங்கு வந்து பணிபுரியும் அளவிற்கான மத்திய மாநில அரசு அலுவலகங்கள் மிகவும் குறைவு. எனவே மணமான குடும்பப்பெண்கள் குடும்பத்தைவிட்டு பிரிந்துவந்து வேலை செய்யவேண்டுமென்ற பட்சத்தில் அவர்கள் வேலையை ஏற்கத் துணிவதில்லை.

(ஆ) மணமாகாத பெண்களும் தாய் தந்தையரைச் சார்ந்து வாழ்வதால் மேற்கூறிய அதே பிரச்சினையை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. வேலையை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். அப்படியே துணிந்து வருகின்ற சிலரும் இங்கு நிலவும் விலைவாசி, வீட்டு வசதியின்மை போன்ற

TRUTH ALONE TRIUMPHS

காரணங்களால் மற்ற இடங்களில் எந்த வேலை கிடைத்தாலும் உடனே இந்த வேலையை விட்டு விடத் தயங்குவதில்லை.

(3) திறமையான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுவது மிகவும் அரிதாக உள்ளது. விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதற்கு மிக முக்கிய காரணம், கோடைக்கானலில் உயர்நிலைப்பள்ளிகள் மட்டுமே உள்ளது. பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பிற்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள கல்லூரி வசதிகள் இல்லை. சமவெளிப் பகுதிகளிலேயே தேவையான வகுப்புகளில் சேர்ந்து படிக்க பல்கலைக்கழக வசதிகள் இருப்பதால், பணவிரயம் செய்து கோடைக்கானல் வந்து மேற்படிப்பு படிக்க வைக்க பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புவதில்லை. எனவே விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் மாணவர்களைத் தேர்வு செய்வதில் எந்த அளவுகோலையும் (Selection Criteria) சரிவரச் செயல்படுத்த இயலாமல் இருக்கிறது.

(4) கோடைக்கானலுக்கு வருவதற்கு—ஊழியர்களாய் இருந்தாலும் சரி, மாணவர்களாய் இருந்தாலும் சரி—பின்வாங்குவதற்கு இன்னொரு காரணம் இங்கு நிலவிவரும் 'கடுங்குளிர்'. இத்தகைய வித்தியாசமான பழக்கமில்லாத தட்பவெப்ப நிலையினால் பல்வேறு நோக்கங்களுக்கும் மனக்கிலேசங்களுக்கும் இவர்கள் ஆளாகின்றனர்.

(5) இங்கு நிலவி வரும் கடுங்குளிரும் எளிதாகச் சென்றடைய முடியாத (Highly inaccessable) நிலையும் பல்கலைக்கழகம் அளிக்கின்ற பல்வேறு பயிற்சித் திட்டங்களிலோ அல்லது வகுப்பகளிலோ வந்து பொது மக்கள் பயன் பெற இயலாவண்ணம் விளங்குகின்றனர். உதாரணமாக, சென்ற வருடம் இந்திய ஆட்சிப் பணி (I.A.S.) தேர்வுக்கு பெண்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு விளம்பரங்கள் கொடுத்த போது வந்த ஒரு சில விண்ணப்பங்களும் ஏற்புடையவையாயில்லை.

(6) கோடைக்கானலில் 'கருத்தரங்குகள்' 'பணிமனைகள்' இவற்றை நடத்துவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஏனென்றால் சம்பந்தப்பட்ட துறைகளில் சிறப்பானவர்களோ

[டாக்டர் க. அன்பழகன்]

(Experts) அல்லது அழைக்கப்படும் சிறப்பு விருந்தினர்களோ (Guests) கோடைக்கானலுக்கு வரத் தயங்குவதற்கு முக்கியகாரணம் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய கடுமையான நீண்டநேர தொலைதூரப் பயணமாகும்.

(7) மேற்கூறிய இக்காரணங்களாலேயே பல்கலைக்கழக ஆட்சிக்குழு (Executive Council) கல்விக்குழு (Academic Comittee) மற்றும் நிதிக்குழு (Finance Commttee) கூட்டங்களை கோடைக்கானலில் நடத்த இயலாமல் இருக்கிறது. அப்படியே நடத்தினாலும் கலந்துகொள்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அதனாலேயே பல்கலைக்கழகம் இக்குழுக் கூட்டங்களை மிகுந்த பணச் செலவு செய்து சென்னையில் நடத்த வேண்டியுள்ளது.

(8) பல்கலைக்கழகத்திற்கென போதுமான கட்டிட வசதி இல்லாத காரணத்தினால் அருகிலுள்ள சில சிறிய வீடுகளை அதிக வாடகைக்கு எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. அவை வசதிக் குறைவாக இருப்பதால் ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது.

(9) பல்கலைக்கழகம் மாணவியர்களுக்கு மட்டுமே விடுதி வசதி அளிக்கின்றது. ஊழியர்கள் தாங்களாகவே தங்கள் வசிப்பிடங்களைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மழைக்காலம் முடிந்தவுடன் ஏற்படும் தீவிர தண்ணீர் பற்றாக் குறை, அடிக்கடி ஏற்படும் மின்சாரத் துண்டிப்பு, தொலைபேசித் துண்டிப்பு, பேருந்து வசதியின்மை போன்ற பல்வேறு காரணங்களினால் இங்கு அன்றாட வாழ்க்கையே ஒரு பிரச்சினையாகி விடுகிறது.

(10) கோடைக்கானல் ஒரு சுற்றுலா மையமாக விளங்குவதால் இங்கு வசிக்கும் நிரந்தர மக்கள் தொகை குறைவு. ஆகையால் ஆய்வுக் திட்டங்களை (Research Projects) மேற்கொண்டிருப்பவர்கள் சமவெளிப் பிரதேசங்களுக்குச் சென்று தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாயமான சூழ்நிலைக்கு ஆளாகின்றனர். இதனல் காலம் மற்றும் பணவிரயம் மிகவும் அதிகம்.

(11) மழைக்காலங்களில் தகவல் சாதனங்கள் பெரிய அளவில் பாதிக்கப்படுவதால் இவை பல்கலைக் கழகத்தின் இயக்கத்தையும் வளர்ச்சியையும் கட்டுப் படுத்துகின்றன.

(12) பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (U.G.C.) மைய உதவியைப் பெறுவதில் ஏற்படும் கால தாமதம் போதுமான சொந்தக் கட்டிடங்கள் இல்லாமையும் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதுமே காரணங்களாகக் காட்டப்படுகின்றன. இந்த இரு குறைகளையும் நிவர்த்தி செய்வதில் பல்கலைக்கழகம் அமையப் பெற்றுள்ள கோடைக் கானல் மலைப்பகுதி பெருந்தடையாக உள்ளது.

பல்கலைக்கழகம் எளிதில் சென்றடையக்கூடிய ஒரு இடத்தில் இயங்க வேண்டுமென்பது திரு. மால்கம் ஆதிசேஷையாவின் தலைமையில் இயங்கிய உயர்மட்டக் குழுவின் (Expert Committee) முக்கியப் பரிந்துரையாகும். இக்கட்டத்தில் குழுவின் பரிந்துரையை மேற்கோளாகக் காட்டுமிடத்து இதன் முக்கியத்துவம் நன்கு புலனாகும்.

"After reviewing all these suggested locations, it is recommended that the Government choose an area for the location of the University on the basis of the following criteria;

Accessibility-the place chosen for the University should be accessible by road and rail (and if possible by air also).

Weather—the weather of the locality should be such as to make possible year round work-as the three functions of the University cannot be interrupted by long vacations to cover extreme climatic conditions.

Availability of 100 hectares of land and adequate water supply for the University and its garden.

Library facilities-the University should have access to libraries outside the locality.

Intellectual and cultural contacts.

The location should be such as to afford the University staff and scholars opportunities for intellectual contact and cultural activities with others in the locality. Intellectual isolation should be avoided at all costs".

மேற்கூறிய காரணங்களாலும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் கோடைக்கானலிருந்து சமவெளிப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்படவேண்டும் என்ற காரணத்தை கொண்டும், கோடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் சென்னை நகருக்கு மாற்றப்படவுள்ளது.

10.00 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த விரிவான அறிக்கையை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அந்த விரிவான அறிக்கையில் சொல்லக்கூடிய காரணங்கள் கொஞ்சமும் பொருத்தம் உள்ளதாகத் தெரியவில்லை. அதிலே சொல்கிறார்கள்: கணவனைப் பிரிந்து அங்கே வந்து வேலை பாரப்பதற்கு யாரும் தயாராக இல்லை என்று ஒரு காரணம் சொல்கிறார்கள். அதேபோல் மணமாகாத பெண்கள், தாய, தந்தையரைப் பிரிந்து வந்து செயல்பட முடியாது என்று சொல்கிறார்கள். அதேபோல் திறமையான மாணவர்கள் யாரும் வரவில்லை என்று சொல்கிறார்கள். கடந்த 6, 7 ஆண்டுகளாக அந்தப் பல்கலைக் கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியானால் அதனுடைய முழு விவரமும் இந்த அறிக்கையில் கொடுத்திருந்தால் எங்களுக்குப் புரிந்து கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். மேலும் அப்படியே இருந்தாலும் அந்த மாவட்டத்தைவிட்டு நீங்கள் அதை மாற்றுவது என்கிறபோது அந்தப் பகுதி மக்களுடைய பெரிய அதிருப்திக்கு ஆளாகவேண்டிய நிலைமை வரும். எனவே எங்களைப் போன்றவர்களை எல்லாம் ஏன், நீங்கள் அதைத் தடுத்து நிறுத்தக்கூடாது என்று கேட்கிறார்கள். ஆகவே தயவுசெய்து தவிர்க்க முடியாத காரணத்தால் அதை மாற்றவேண்டிய சூழ்நிலை வந்தால் — அப்படி மாற்றவேண்டிய தேவையில்லை. அப்படியே மாற்ற வேண்டும் என்ற சூழ்நிலை வந்தாலும்—— பழனியிலே தரைப்பகுதியிலே நல்ல வசதி வாய்ப்பு இருக்கிறது. மேலும் தரைப்பகுதிதான் அதற்குப் பொருத்தம் என்றும் சொல்கிறீர்கள். எனவே அதைப் பழனியிலே வையுங்கள், அல்லது திண்டுக்கல் மாவட்டதின் தலைநகராக இருப்பதால் திண்டுக்கல்லிலே வையுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் நீங்கள் சென்னைக்குக் கொண்டு வருவது என்பது அவ்வளவு பொருத்தம் இல்லை. அதைக் கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தைப்பற்றி இது எந்த நோக்கத்திற்காக, எந்த

அடிப்படையில் அமைந்தது என்பதை விளங்கிக் கொண்ட பின்பு கேள்வி கேட்டதாக நான் கருத முடியாததற்கு மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் என்று பெயரிட்டு அழைக்கப்படுகிற காரணத்தால் பெண்களே இருந்து நடத்தவேண்டும் என்ற ஒரு கருத்து மட்டுமே அதிலே இடம் பெற்றிருப்பதாகக் கருதலாகாது. ஆனால் இது மகளிரைப் பற்றிய தனிப்பட்ட பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், அவர்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதற்காக, மகளிர் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்வதைப ஊக்கப்படுத்து வதற்காக ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகம், இதற்கு ஒரு சுற்றுச் சார்பு தேவைப்படுகிறது. எப்படிப்பட்ட சுற்றுச் சார்பு என்றால் ஆயிரக்கணக்கான மகளிர் படித்து வெளி வரக்கூடிய கல்லூரிகளோ, பல்கலைக் கழகமோ அந்தச் சூழ் நிலையில் இருக்குமானால்தான் இந்தப் பல்கலைக் கழகத் திற்கு ஊக்கம் கிடைக்கும். இல்லை என்றால் அந்தப் பல்கலைக் கழகத்தின் சுற்று வட்டாரத்தில் மகளிர் கல்லூரிகள் ஏராளமாக இல்லாத இடத்திலேயும், மிகப் பெரிய நூலகம் ஆராய்ச்சிக் கூடங்கள் இவை இல்லாத இடங்களி லேயும் இது சிறப்புறாது. மேலும் மகளிர் பணியாற்ற வரு வார்களேயானால், அவர்களுடைய குடும்பநிலை பாதிக்கப் படாத சூழ்நிலை இருக்கக்கூடிய இடத்திலே இந்தப் பல் கலைக் கழகம் அமைந்தால் தான் இதற்குரிய வளர்ச்சி ஏற் படும். கல்வித் துறையிலே நிபுணர்களாக இருக்கக் கூடிய மால்கம் ஆதிசேஷையா அவர்கள், அந்தப் பல்கலைக் கழ கத்தினுடைய இன்றைய துணை வேந்தர் அவர்கள், அந்த பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிக் குழு உறுப்பினர்கள் ஆகிய அத்தனைபேருமே இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் கள். அந்தப் பல்கலைக் கழகத்திலே இப்போது பணியாற்று கிறவர்கள், சென்னையில் இந்தப் பல்கலைக் கழகம் அமையு மேயானால் எங்களுடைய பணி சீராகும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இது ஒன்றும் மாவட்டத்திற்கு என தரப் பட்ட பல்கலைக் கழகம் அல்ல. ஆகவே மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கருதுவதுபோல் இது வட்டார வளர்ச்சிக்கு வழி செய்யக்கூடிய தொழிற்சாலை அல்ல.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்கானலில் இருக்கக்கூடிய அந்த அன்னை தெரசா பல்கலைக் கழகத்தைச் சென்னைக்கு மாற்றுவதற்குப் பதிலாக, தரைப்பகுதியாக பெரியகுளம் இருக்கின்ற காரணத்தால் பெரியகுளத்தில் அதை அமைத்தால் நன்றாக இருக்கும். பெரியகுளத்தில் மகளிர் கல்லூரி இருக்கிறது. ஆயிரக்கணக்கான அரசு புறம்போக்கு நிலங்கள் அங்கே இருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் ஏராளமாக மகளிர்

கல்லூரிகள் இருக்கின்றன. டாக்டர்கள் எல்லாம் தலைநகரில்தான் பணியாற்றுவோம் என்று சொன்னதைபோல, இன்றையதினம் எங்கே பணியாற்றுகிறீர்கள் என்று கேட்டால் தலைநகருக்குச் சென்றால் நல்லதாக இருக்கும் என்றுதான் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். எனவே கிராமப் பகுதியில் இருக்கக்கூடியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற வகையில் அந்த அன்னை தெரசா பல்கலைக் கழகத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்து பெரியகுளம் நகரத்திற்கு அருகாமையில் ஆயிரக்கணக்கான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் அமைத்தால் நல்லது. அங்கே பல்வேறு மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் பல்வேறு மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன. எனவே மீண்டும் மறுபரிசிலனை செய்து அந்த வகையில் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருந்தாலும் போதாது. இன்னும் சொல்லப் போனால் ஏராளமான நீர்வளம். கட்டட வளம் இருந்தால் கூடப் போதாது. மகளிர் பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்கள், தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு உருவாக்கித் தீரவேண்டும். இது வெறும் பொதுக் கல்வி அமைப்பு மட்டுமல்ல. இது ஒரு தனித் தன்மை உள்ள அமைப்பு. இதிலே ஹானரரியாக்க் கூட அவ்வப்போது வந்து கலந்து மகளிரைப் பற்றிய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆய்வு நடத்தக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கவேண்டும். அந்த வாய்ப்பு இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சென்னை மாநகரத்தில் கிடைக்கிற அளவுக்கு மதுரை நகரத்திலேயும் கிடைக்க முடியாது. கோவை மாநகரத்திலும் கூட அந்த அளவுக்கு வாய்ப்பு கிடைக்க முடியாது. இந்தப் பல்கலைக் கழகம் ஒரு புதிய அனுபவம். மற்ற பல்கலைக் கழகம் போல் அல்ல இது. மதுரைப் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் போன்ற ஒரு பல்கலைக் கழகம் அல்ல இது. இந்த ஆராய்ச்சித் துறையில் இது வரையில் அவர்கள் எந்த அளவுக்குச் சிறப்புப் பெற்று இருக்க வேண்டுமோ அந்த அளவுக்குப் பெற முடியாத ஒரு இக்கட்டான நிலைமை இருப்பதன் காரணமாகத்தான், அந்த முயற்சி வெற்றிகரமாக அமைவதற்காகத் தான், இந்தப் பல்கலைக் கழகம் சென்னைக்கு வருகிறது. எனவேதான் அது சென்னைக்கு வரவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. மற்றும் ஒன்று, இதிலே பணியாற்றுகிறவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

முன்னர் ஏற்றுக் கொண்டவர்கள் பணியாற்ற வராத நிலைமையும் உண்டு. அவர்களுக்குக் கோடைக்கானலில் கட்டடம் இல்லை என்பதால் கட்டடங்களை மட்டும் மலைக்குக் கீழே வழங்கிவிட்டால் போதாது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இந்தப் பல்கலைக் கழகத்தை ஒரு தனித்தன்மை உள்ளதாக வளர வழி செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் 'நான்-அஃபிலியேட்டிங்' என்று சொல்லப்படுகிற ஒரு கருத்து மட்டும் இதற்குத் தனித்தன்மையல்ல. மகளிர் பேரளவினர் தொடர்பு கொண்டு, பங்கேற்கும் வகையில் அமைவதே இதன் தனிச் சிறப்பு ஆகும். பிரச்சினைகளைப் பற்றி அணுகி ஆராய்ந்து அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய பலன் பரவலாக மகளிர் சமுதாயத்திற்குக் கிடைப்பதற்கு இது முதல் கட்டத்தில் உருவாகி இருப்பதன் காரணத்தால் சென்னையில் வைத்து நடத்துவதைத் தவிர இந்தப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு வேறு வழியில்லை. பெரிய குளத்திற்கு என்னசெய்யலாம் என்பது பற்றி ஆராயப்படும்.

(ஆ) கண்ணகி கோயில் கேரளாவிற்குச் சொந்தமென அம்மாநில வனத்துறை அமைச்சர் பேசியிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு, அ. இரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, "தமிழகத்தின் எல்லையில் உள்ள கண்ணகி கோயில் கேரளாவிற்கு சொந்தம் என்று கேரள மாநில வனத்துறை அமைச்சர் கூறியிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கலைஞரின் தி. மு. க. அரசு, மீண்டும் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு, பழுதடைந்து கிடக்கும் பழமையான திருக்கோயில்களைப் புதுப்பித்து, சீரமைக்கும் பணிகளில்